திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஜூலை மாதத்தில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது காத்திருப்போர் பட்டியல் என்று தயாரிக்கும்பொழுது, 100 மாணவர்களுக்கு மேற்பட்ட தொகை வைத்திருக்கிற அளவுக்கு காத்திருப்போர் பட்டியல் தயாரிக்கப்பட்டதா ? மாவட்ட வாரியாக விகிதாசாரத்தை அனுசரித்து, தயாரிக்கபட்டு வைக்கப்பட்டிருந்ததா அந்தப் பட்டியல் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜூலை மாதத்து லிஸ்டில் 100 பேர்களுக்கு மேலே தயாரிக்கப்பட்டிருந்தது. செலக்ஷன் செய்யும்பொழுது 100 சீட்களுக்கு மாவட்ட வாரியாக எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படித்தான் கொடுத்திருக்கிறது.

Tamil Pandits

* 311 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that unqualified Tamil Pandits in aided higher elementary schools have been thrown out of employment from 5th March 1965 consequent on the orders issued in Proceedings Rc. No. 982-B7/64, dated 17th February 1964 of the Director of Public Instruction, Madras ;

(*b*) whether any representations have been received in this regard ; and

(*c*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It has been brought to the notice of Government that unqualified Tamil Pandits have been thrown out of employment.

(*b*) Yes.

(*c*) The matter is under the consideration of Government.

இந்தி, தமிழாசிரியர்கள்

* **312 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

நமது ராஜ்யத்திலுள்ள சர்க்கார், தனியார் போர்டு நிர்வாகங்களின் கீழுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் தற்போது வேலை செய்து வரும் இந்தி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

Name of management. (1)	Hindi Pandits. (2)	Tamil Pandits. (3)
Government	88	229
Municipal	121	346
District Board	1,055	2,305
Private	809	1,942
Total ..	2,073	4,822

6th November 1965]

திரு. எம். எஸ். செல்வராஜன் : முதல் கிரேடு இந்தி பண்டிட், முதல் கிரேடு தமிழ் பண்டிட் நியமனம் செய்வதிலே எந்த அடிப்படை வகுக்கப்பட்டிருக்கிறது? அந்த அடிப்படையில் இந்தி பண்டிட் நியமனம் செய்வதற்கும், தமிழ் பண்டிட் நியமனம் செய்வதற்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் கிரேடு தமிழ் பண்டிட், முதல் கிரேடு இந்தி பண்டிட் நியமிப்பது ஸிலபஸைப் பொறுத்தது. இந்தி சிலபஸ் வேறு, தமிழ் சிலபஸ் வேறு. அந்த அடிப்படையில் எத்தனை பேர்கள் முதல்தர பண்டிட்கள் நியமிப்பது என்பது முடிவு செய்யப்படுகிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, தமிழ் பண்டிட் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டிருந்த நேரத்தில், அவருக்கு ஆங்கில அறிவு போதாது என்று கருதி, மறுபடியும் கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து அவரை நீக்கியது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை. கல்லூரி முதல்வர் நியமனம் செய்வதிலே தமிழ் பண்டிட்டாக இருந்தாலும் அல்லது வேறு ஆசிரியர்களாக இருந்தாலும், தகுதி பார்த்து நியமனம் செய்யப்படுகிறது. சில சமயங்களில் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு அவரையே தொடர்ந்து கன்பர்ம் செய்வதும் உண்டு. கன்பர்ம் செய்யாமல் மறுபடியும் அவரை ஆசிரியராகப் போடுவதும் உண்டு.

இந்தி ஆசிரியர்கள் நியமனத்திற்கான மான்யம்

* 313 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இந்தி ஆசிரியர்களை நியமிப்பதற்காக மத்திய அரசு இம்மாநில அரசுக்கு மான்யம் ஏதேனும் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், வழங்கிய தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes.

Year. (1)	Central grant released. (2)
	RS.
1961–62 ..	2,80,800
1962–63 ..	8,96,400
1963–64 ..	12,87,540
1964–65 ..	40,00,000

திரு. செ. மாதவன் : இந்தி ஆசிரியர்களை பராமரிப்பதற்கான முழு செலவும் மத்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? அல்லது, அந்த மானியத்தைத் தவிர மாநில சர்க்கார் ஏதாவது தொகை செலவழிக்கிறதா? அப்படியானால் எவ்வளவு செலவு செய்யப்படுகிறது?